யா :.கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்
கரவெட்டி.

# வருடாந்தப் பரிசளிப்பு விழா - 2014

[redacted] [redacted]

## மகுடவாசகம்

"பிச்சை புகினும் கற்கை நன்றே".

## பணிக்கூற்று

பாடசாலையின் பௌதீக மனித வளங்களை உச்சமாகப் பயன்படுத்திக் கல்விக் கனி நிலையை உருவாக்குதல்

## நோக்கக்கூற்று

எதிர்கால உலகின் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய திறன்களும் ஆற்றல்களும் ஆரோக்கியமும் நாட்டுப் பற்றும் உள்ள நற் பிரஜைகளை உருவாக்குதல்.

# பரிசளிப்பு விழா 2014

அதிபர் அறிக்கை

சைவத் தொண்மையும் மெய்மை நிலை மாறாது, யார்க்கரு விநாயகரின் அருள்பாலித்துக் கொண்டு விளங்கும் இவ்வூர்ஆகும். மருதநிலப்பரப்பில் அமைந்த எங்கள் பாடசாலையின் பரிசளிப்பு விழாவின் அறிக்கையை இப்பாடசாலையின் அதிபராகிய நான் முன்வைக்கிறேன்.

மதிப்பிற்குரிய பிரதம விருந்தினர் அவர்களே !மற்றும் விருந்தினர்களே! சபையோர்களே! ஆசிரியர்களே! மாணவச் செல்வங்களே! இன்று இப் பாடசாலையின் சிறப்பு நாட்களில் ஒன்றாகும். இன்று வரை தமது பாட, இணைப்பாடத்துறைகளில் சாதனைக்குரிய மாணவர்களுக்கு கௌரவம் அளிக்கும் நன்நாள் இன்றாகும்.

எவ்வாறேயாயினும் வரலாற்றுப் பாதையில் 75 வருடங்களைக் கண்ட, இப்பாடசாலையின் தொண்மை பற்றிய விளக்க நிலையை இவ்வூரவர்களும் கல்வித்துறைசார்ந்தவர்களும் நன்கறிவர். எனினும் இப்பாடசாலையின் இன்றைய நிலை பற்றி பெற்றோர்களாகிய உங்களுக்கு குறித்துரைப்பது அவசியமானது. அதில் முக்கியமானது என்னவெனில் பாடசாலைக்கு பிள்ளைகளின் சேர்வு என்பது மிகமிகக் குறைந்து விட்டது.இதனை அதிகரிக்குமுகமாக உங்களது ஆதரவு இன்றியமையாததாகும். எவ்வாறாயினும் இப்பாடசாலையின் வளர்ச்சிப்பாதை என்பது என் தலைமையில் நடந்தேறும் என்பதைதிடசங்கற்பமாக அழுத்தி உரைக்கிறேன்.

இவ்வருடம் நடந்து முடிந்த தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சி.பிதுசன் இ.அபிசேகா ஆகிய இரு மாணவர்களும் சித்தி அடைந்துள்ளமை எமக்கு பெருமை சேர்க்கின்றது.அத்துடன் இரு மாணவர்கள் நூறு புள்ளிகளிற்கு மேல் பெற்றுள்ளனர். இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர் வன்னிக்க இடமாற்றம் பெற்றுசென்ற வேளையிலும் எனது விடா முயற்சியும் பெற்றோரது ஆதரவின் காரணமாகவும் இவர்களை வழி நடத்திச் செல்ல முடிந்தது. இதற்கு உறுதுணையாக இருந்த செல்வி. இ.சுரேகா இராசலிங்கம் அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகள். இம் மாதம் தொடக்கம் எமது பாடசாலை இணையத்தள (இன்ரநெற்) வசதி செய்யப்பட்டுள்ளது.இவ்வசதி மாணவரது கல்வி மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருக்கும்.

இவ்வாறாக இப்பாடசாலை 2014ஆம் ஆண்டு கண்ட சாதனைகளின் பட்டியலை தங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமைப்படுகிறேன்.

2014 ஆம் ஆண்டு எமது பாடசாலை பெற்ற சாதனை விபரம்

<u>சாதனைகள் விபரம்</u>

1.கோட்ட வலய மட்டம்

| தொ.இல | மாணவர் விபரம் | சாதனை | கோட்ட மட்டம் | வலய மட்டம் |
|---|---|---|---|---|
| 01 | ர.பிரதாபன் | திருமுறை பண்ணோடு பாடுதல் | | 3 |
| 02 | பு.நிதர்சன் | சமுகவிஞ்ஞானப்போட்டி | | 1 |
| 03 | பு.நிதர்சன் | சிறுவர்தினப்போட்டி (கட்டுரை) 3 | | |
| 04 | ஜெ.றஜீந்திரன் | சிறுவர்தினப்போட்டி (சித்திரம் 3 | | |
| 05 | த.பிரதீபா | தமிழ்த்தினப்போட்டு (தனி இசை) | | 3 |
| 06 | .தனுசன் | உயரம் பாய்தல் | 2 | |
| 07 | அஜந்தன் | நீளம் பாய்தல் | 3 | |
| 08 | சி.இந்துஜா | சமுகவிஞ்ஞானப்போட்டி<br>ஆங்கிலதினப்போட்டி **(copy writing)**<br>ஆங்கிலதினப்போட்டி **(poem)**<br>சிறுவர்தினப்போட்டி (பேச்சு) 1 | <br>2<br>3 | 3 |
| 09 | ஸ்ரீ.சங்கவி | சிறுவர்தினப்போட்டி (கட்டுரை) 3 | | |
| 10 | வி.றேணுகா | சிறுவர்தினப்போட்டி (கவிதை) 3 | | |
| 11 | வி.நிதர்சன் | விவசாய பொதறிவு போட்டி | | 1 |
| 12 | க.பவித்திரா | ஆங்கிலதினப்போட்டி **(copy writing)** | 2 | |
| 13 | சா.நிறோசா | ஆங்கிலதினப்போட்டி **(poem)** | 3 | |
| 14 | ஏ.சசிமதி | தட்டெறிதல் | 3 | |
| 15 | ப.நிலக்சன் | தட்டெறிதல்<br>குண்டு போடுதல் | 3<br>3 | |
| 16 | வி விநோத்குமார் | குண்டு போடுதல் | 3 | |
| 17 | ப.சுலக்சன் | தட்டெறிதல் | 3 | |

வேறு நிறுவனங்களின் போட்டி

| தொ.இல | மாணவர் விபரம் | சாதனை | பிரதேசசெயலகம் |
|---|---|---|---|
| 01 | பு.நிதர்சன் | சிறுவர்தினப்போட்டி (கட்டுரை) | 3 |
| 02 | ஜெ.ரஜீந்திரன் | சிறுவர்தினப்போட்டி (சித்திரம் | 3 |
| 03 | சி.இந்துஜா | சிறுவர்தினப்போட்டி (பேச்சு) | 1 |
| 04 | ஸ்ரீ.சங்கவி | சிறுவர்தினப்போட்டி (கட்டுரை) | 3 |
| 05 | வி.றேணுகா | சிறுவர்தினப்போட்டி (கவிதை) | 3 |

ஆசிரியர் ஆளணிவிபரம்-2014

| ஆசிரியர் வளம் | தொகை | இருப்பது | குறைவு | மேலதிகம் |
|---|---|---|---|---|
| அதிபர் | 01 | 01 | - | - |
| ஆரம்பப்பிரிவு | | | | |
| பொது | 03 | 02 | 01 | - |
| ஆங்கிலம் | 01 | - | 01 | - |
| இடைநிலைப்பிரிவு | | | | |
| கணிதம் | 01 | 02 | - | 01 |
| விஞ்ஞானம் | 01 | 01 | - | - |
| ஆங்கிலம் | 01 | 01 | - | - |
| தொழில்நுட்பம் | 1.5 | 0.5 | 01 | - |
| தமிழ் | 01 | 01 | - | - |
| சமூக விஞ்ஞானம் | 01 | - | 01 | - |
| வர்த்தகம் | - | 01 | - | - |
| அழகியல் | 01 | 01 | - | - |
| ஏனையவை | - | 02 | - | 02 |

மாணவர் விபரம்-2014

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 1 | 2 | 03 |
| 2 | 3 | 2 | 05 |
| 3 | 4 | 4 | 08 |
| 4 | 2 | 2 | 04 |
| 5 | 4 | 5 | 09 |
| 6 | 6 | 5 | 11 |
| 7 | 4 | 4 | 08 |
| 8 | 12 | 4 | 16 |
| 9 | 8 | 11 | 19 |
| 10 | 7 | 8 | 15 |
| 11 | 5 | 8 | 13 |
| மொத்தம் | 56 | 55 | 111 |

தேவை விபரம்

ஆசிரியர்கள்

ஆரம்பப்பிரிவு பொது-02

ஆரம்பப்பிரிவு ஆங்கிலம்-01

தகவல் தொழில் நுட்பம்-01

உடல்கல்வி-01

மொத்தம்-05

பௌதீகவளம்

ஆசிரியர் மேசை கதிரை -11

சுற்றுமதில் **-1/2**பகுதி

விஞ்ஞானகூடம் -1

கணனி ஆய்வுகூடம் -1

நூலகம் -1

ஆசிரியர் ஓய்வு அறை -1

சங்கீத அறை -1

பிரார்த்தனை மண்டபம் -1

பாடசாலை முகப்பு -1

மதிப்புக்குரிய பிரதம விருந்தினர் அவர்களே!

எமது பாடசாலைத் தேவைகளை தங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம். இத்தேவைகளை தாங்கள் கருத்திற் கொண்டு எமது பாடசாலை வளர்ச்சிக்கு உதவவேண்டும் என பணிவோடு கேட்டுக்கொண்டு எனது அறிக்கையை இத்தடன் முடித்துக்கொள்கிறேன்.

நன்றி!